44	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	416,75,54	1	—
45	தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–தமிழ் வளர்ச்சி–பண்பாடு	20,78,71	66,02	—
46	தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை	17,22,36	27,50	—
47	போக்குவரத்துத் துறை	154,72,02	6	—
48	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	16,73,29	2	—
49	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	2,828,28,79	—	—
50	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	152,98,27	—	—
	பெருமொத்தம்	16,005,31,71	2,938,50,65	384,73,69

5. அறிவிப்பு

இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2006–2007 வெட்டுத் தீர்மானங்கள்–அளிப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் பேரவைக்கு அளிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கை தொடர்பாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 186 (2)–ன்கீழ் வெட்டுத் தீர்மானங்களை பேரவை உறுப்பினர்கள் முன்மொழியலாம். எனினும், 13–1–2006 ஆம் நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவிற்கிணங்க கீழ்க்காணும் முக்கிய மானியக் கோரிக்கைகளுக்கு மட்டும் வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கலாம்:

2006 ஜனவரி 20] [பேரவைத் தலைவர்]

1. உள் துறை – காவல்

2. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

3. தொழில் துறை

4. வேளாண்மைத் துறை

5. உயர் கல்வித் துறை

6. பள்ளிக் கல்வித் துறை

அவ்வாறு கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், மேற்கூறிய மானியக் கோரிக்கைகள் மீது தலா 5 வெட்டுத் தீர்மானங்கள் வீதம் 21–1–2006 அன்று சனிக்கிழமை பிற்பகல் 3–00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (21–01–2006) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 6-16 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

26. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் பணி விதிகள் இயற்றியது குறித்து பொது (மஉ)த் துறையின் 13–6–2005 ஆம் நாளிட்ட 612 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (மத்திய சட்டம் 10/1994) 41 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

27. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)